இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித் துறை

விசேட தேவைகள்சார் கல்வியில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2020/2021

இறுதிப் பரீட்சை - 2022

SNP 8335/ESP2135 – விசேட தேவைகள்சார் கல்வியில் சமூகமயமாக்கல் அடிப்படைகள்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 04.09.2022 நேரம்: மு.ப. 9.30 - பி.ப 12.30

பகுதி - 1 இல் அமைந்துள்ள அனைத்து வினாக்களுக்கும் பகுதி - 2 இல் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

1. "சமூகமயமாக்கல் ஒரு வாழ்நாள் நீடித்த செயல்முறையாகும்" உதாரணங்களை முன்வைத்து இக்கூற்றினை சுருக்கமாக விளக்குக.
2. கலாச்சாரத்திற்கும் துணை – கலாச்சாரத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ? **ஐந்து (5)** காரணங்களைக் குறிப்பிடுக..
3. விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கான முதன்மை சமூகமயமாக்கல் மற்றும் இரண்டாம் நிலை சமூகமயமாக்கல் ஆகியவற்றின் விளைவுகள் பற்றி ஆராய்க.
4. **ஐந்து (5)** சமூகமயமாக்கல் முகவர்களைக் குறிப்பிடுக.
5. உதாரணங்களை மேற்கோள்காட்டி 'சகபாடிக் கற்பித்தல்' ( Peer Tutoring) என்பதை விளக்குக.
6. உங்கள் சொந்த மொழிநடையில் 'நெறிமுறைகள்' (Norms) என்பதை வரைவிலக்கணப்படுத்துக.
7. பிரிட்டன் ரேப்போர்ட் மற்றும் ரேப்போர்ட் (Britain Rapport and Rapport) (1982) இனால் அடையாளப்படுத்தப்பட்ட **ஐந்து (5)** வகை குடும்ப பன்முகத்தன்மையைப் பட்டியற்படுத்துக.
8. **நான்கு (4)** வகையான பெற்றோரியல் பாங்கினைக் குறிப்பிட்டு, விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட குழந்தைகளுக்கு மிகவும் பொருத்தமான பெற்றோருக்குரிய பாங்கை விளக்கவும்.

(8X 5 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. ‘குழந்தைகள் முறையான பாடசாலைக்குள் ஒத்த வயதினருடன் நுழையும்போது சமூகமயமாக்கல் மிகவும் குறிப்பிடத்தக்களவில் நிகழ்கின்றது’

அ. சகபாடிக் குழுவின் **மூன்று (3)** அம்சங்களைக் குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

ஆ. இரண்டு நேர்மறை மற்றும் எதிர்மறைக் கருத்துக்களுடன் மேலே உள்ள கூற்றுத் தொடர்பாக ஆராய்க.

(08 புள்ளிகள்)

இ. சகபாடிக் குழுக்கள் மற்றும் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட மாணவர்களுடனான தொடர்புகளின் தாக்கத்தை ஆராய்க.

(09 புள்ளிகள்)

10. ‘கால ஓட்டத்தில், பெரும்பாலான சமூகங்களில், குடும்பத்தின் அமைப்பு பொதுவாக விரிகுடும்ப வகையில் இருந்து கருக்குடும்ப வகைக்கு மாறிவிட்டது’ (குட், 1963)

அ. தற்போதைய இலங்கையில் மேற்குறித்த மாற்றத்திற்கு பங்களித்த காரணிகள் யாவை? குறைந்தது **ஐந்து (5)** காரணிகளைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

ஆ. குடும்பமொன்று, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விசேட தேவைகளைக் கொண்ட குழந்தைகளைக் கொண்டிருக்கும் போது சமூகமயமாக்கல் ஒரு பாரிய சவாலாக மாறும் இக்கூற்றினை நியாயப்படுத்துக.

(08 புள்ளிகள்)

இ. மேற்கூறிய சவால்களை எவ்வாறு கையாள்வது என்பதற்கான உங்கள் ஆலோசனைகளை முன்வைக்குக.

(07 புள்ளிகள்)

11. ‘அனைத்து வகையான மனித சமுதாயத்திலும் ஏற்றத்தாழ்வுகள் உள்ளன. இந்த ஏற்றத் தாழ்வுகளைக் குறிக்க சமூகவியலாளர்கள் சமூக அடுக்கு என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர்’

அ. சமூக அடுக்கின் **நான்கு (04)** அடிப்படை அமைப்புக்களை பட்டியலிடுக.

( 04 புள்ளிகள்)

ஆ. சமூகப் பெயர்ச்சி என்ற எண்ணக்கருவைப் பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் வரைவிலக்கணப்படுத்துக.

( 08 புள்ளிகள்)

இ. இலங்கையில் சமூக வர்க்கம் தொடர்பான அதிகரித்து வரும் கல்விப் பிரச்சினைகளை ஆராய்க.

( 08 புள்ளிகள்)

12. ‘சமூக அந்தஸ்து (Sociometric) நிலையானது மற்றும் முக்கியமானது, ஏனெனில் குழந்தைகளின் சமூக மற்றும் உணர்ச்சி விருத்தியில் சகபாடிகளின் உறவுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன’

அ. சமூக அந்தஸ்து நிலைக்குழுக்கள் **ஐந்து (05)** இனைப் பட்டியற்படுத்துக.

( 05 புள்ளிகள்)

ஆ. ஆசிரியர்களாகிய நீங்கள் உங்கள் வகுப்பறையில் சர்ச்சைக்குரிய மாணவர்களைச் சந்திக்கும் போது கற்பித்தல் கற்றல் செயற்பாட்டில் முன்னெடுக்க வேண்டிய உத்திகள் யாவை?

( 07 புள்ளிகள்)

இ. **மூன்று (03)** முக்கிய சகபாடிக் கற்றலைக் குறிப்பிட்டு, விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட குழந்தைகளுக்கு சகபாடிக் கற்றல் முறைகள் எவ்வாறு பயனளிக்கிறது என்பதை விளக்குக.

( 08 புள்ளிகள்)

13. ‘சமூகமயமாக்கலின் சூழ்நிலையானது நோக்கத்திலும் கால அளவிலும் மாறுபடும்’

அ. சமூகமயமாக்கல் முறையின் விருத்திக்கும் மீள் சமூகமயமாக்கல் முறைக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்குக.

( 05 புள்ளிகள்)

ஆ. சமூகமயமாக்கப்படாத குழந்தைகளின் குணாதிசயங்களைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்கவும்.

( 05 புள்ளிகள்)

இ. விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட குழந்தைகளின் சமூகமயமாக்கல் மறைகலைத் திட்டம் எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்துகின்றது என்பதை பகுத்தாராய்க.

( 10 புள்ளிகள்)

14. ‘வெகுசன ஊடகங்கள் ஒரு சக்திவாய்ந்த சமூக முகவராகக் கருதப்படுகின்றன’

அ. விசேட கல்வித் தேவைகள் உள்ள குழந்தைகள் மீது வெகுஜன ஊடகத்தின் நேர்மறை மற்றும் எதிர்மறை தாக்கங்களைச் சுருக்கமாக விளக்குக.

( 06 புள்ளிகள்)

ஆ. ஊடகக் கல்வியறிவு மற்றும் ஊடகக் கல்வியைப் பயன்படுத்தும் போது விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட பிள்ளைகளுக்கு எவ்வாறான சவால்கள் ஏற்படுகின்றன.

( 08 புள்ளிகள்)

இ. விசேட கல்வித் தேவைகளைக்கொண்ட பிள்ளைகளின் கலாச்சார விருத்திக்காக வெகுஜன ஊடகங்களைப் பயன்படுத்தக்கூடிய வழிகளைப் பரிந்துரைக்க.

( 06 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*